செய்தி வெளியீடு எண்: 273 நாள்: 02.05.2019

# செய்தி வெளியீடு

## நான்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை தொடர்பாக முன் ஏற்பாட்டு பணிகள் குறித்து தமிழக தலைமை தேர்தல் அலுவலர் திரு. சத்தியபிரத சாகு இ.ஆ.ப, தலைமையில் காணொலி காட்சி ஆய்வு கூட்டம்.

•••••

தமிழகத்தில் எதிர்வரும் 19ம் தேதி நடைபெறவுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளின் வாக்குபதிவு முன் ஏற்பாடுகள் மற்றும் 23ந்தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கைக்கு செய்ய வேண்டிய முன் ஏற்பாட்டுப் பணிகள் குறித்து இன்று தலைமை செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு.சத்யபிரத சாகு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் ஆகியோருடன் காணொலி காட்சி மூலம் கலந்தாய்வு கூட்டம் இன்று (02.05.2019) நடைபெற்றது.

இடைத்தேர்தல் நடைபெறும் 4 சட்டமன்ற தொகுதிகளிலும் பதட்டமான வாக்குச்சாவடிகள், பிரச்சனைகக்குரிய வாக்குச்சாவடிகள் ஆகியவற்றை அடையாளம் கண்டு கண்காணித்தல், பாதுகாப்பு வசதிகளை அதிகமாக்குதல், கண்காணிப்பு கேமிராக்களை பொருத்துதல் ஆகியவற்றை உடனடியாக

மேற்கொள்ளவேண்டும் எனவும், 100 சதவிகிதம் வாக்காளர் சீட்டுகளை வினியோகம் செய்திடவும் மண்டல அலுவலர்களை நியமித்தல் வாக்குபதிவு அலுவலர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குதல், சாய்வு தளவசதி, சக்கர நாற்காலிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல் போன்ற பணிகளை விரைந்து செய்திட வேண்டும் என தலைமை தேர்தல் அதிகாரி அறிவுரை வழங்கினார்.

மேலும் அவர் ஆய்வுக்கூட்டத்தில் பேசும் பொழுது, இடைத்தேர்தல் வாக்கு பதிவிற்கு தேவையான வாக்குபதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்கினை சரிபார்க்கும் இயங்திரங்கள் ஆகியவற்றை தயார் நிலைப்படுத்துமாறும், ஊடக மையங்கள் பொது தகவல் அறைகள் ஏற்படுத்தவும், அறிவுரைகள் வழங்கினார்.

23ந்தேதி வாக்கு எண்ணிக்கை மையங்களில் உள் பகுதி மற்றும் வெளிப்பகுதிகளில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும் மையங்களிலும், பாதுகாப்பு கருவிகள் வைத்தல், தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், ஜெனரேட்டர் வசதிகளை ஏற்படுத்தவும், அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் அஞ்சல் வாக்கு சீட்டுகள் கொடுக்கப்பட்ட விவரம், இதுவரை பெறப்பட்ட விபரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்த தலைமை தேர்தல் அதிகாரி அவற்றை தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்தில் பாதுகாப்புடன் வைப்பதோடு நாள்தோறும் அதன் அறிக்கையை தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும், வாக்கு எண்ணிக்கை மையங்களில் வீடியோ கேமிரா மற்றும் சிசி டிவி கேமிராக்கள்

பொருத்தவும் 18 மற்றும் 19ம் தேதிகளில் அவற்றின் செயல்பாடுகளை உறுதி செய்ய வேண்டும் எனவு அறிவுரை வழங்கினார்.

வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்படுவதோடு, வாக்கு எண்ணிக்கைக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்து தயார்நிலையில் வைத்திட வேண்டும் எனவும், அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் இணைய தளவசதிகளை ஏற்படுத்தவும், படிவம் 20 மூலம் வாக்கு எண்ணிக்கை விபரத்தை உடனுக்குடன் துரிதமாக தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இக்காணொலி காட்சி கலந்தாய்வு கூட்டத்தில், கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி திரு.வி. ராஜாராமன் இ.ஆ.ப., இணை தலைமை தேர்தல் அதிகாரிகள் திரு. தீபக் ஜேக்கப் இ.ஆ.ப., திரு. வே. மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**